தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

(கிழமை இதழ்)

தொகுதி-3 | தி. பி. 2016 | மடங்கல் 23 | (8-9-1985) | 65 காசுகள் | [இதழ் எண்: 63] | [பகுதி 31-33

திம்பு அணுகுமுறை பாராட்டவேண்டிய அரச தந்திரமன்று!

திம்புப்பேச்சு சிங்களத் தாக்குதலை உண்டாக்கிப் போராளிகளை அச்சுறுத்தலுக்கும், வேறு வழியில்லாத ஒப்புதலுக்கும் வற்புறுத்துவதே!

விளம்பரமும், வாய் வீரர்ப்பும் இருந்தால், அரசு, கழுதையையும் குதிரையாக உருவாக்கிக் காட்டும்!

இலங்கைத் தமிழர் பேச்சில் இராசீவ் ஈடுபாடு, அரசியல் திறமை என்று பேசுவது, முட்டாள்தனமும்; அடிமைத்தனமுமே ஆகும். தொல்லை தந்து பணியவைக்கும் உத்தியே அது!

தமிழரின் ஒட்டுமொத்தமான இறுதிப் போராட்டக் காலம் இது! போராளிகள் உறுதியைக் கைவிட வேண்டா!

ஒருபுறம் தமிழின அழிவு! ஒருபுறம் ஒப்புரவுப் பேச்சு! கொடுமையும் சூழ்ச்சியும் நிறைந்த அணுகுமுறை இது!

தொடர்வண்டிப்போராட்டத்தைத் தொடர்ந்து படிப்படியாகத் தனித்தமிழ் நாட்டுப் போராட்டத்தை முன்வைக்க வேண்டும்!

அதற்கிதுவே நேரம்! அப் போராட்டத்தில் உ.த.மு.க. கலந்துகொள்ளும்!

பாவலரேறு உறுதியுரை!

திம்புப்பேச்சு ஒருபுறம்! இலங்கையில் தமிழின அழிப்பு மறுபுறம்! இதுவா இராசீவின் அரச தந்திரம்? இங்குள்ள இந்திராக் கட்சியினர்க்கு இது விளங்கவில்லையா? நடுநிலைமை அணுகு முறை என்றால் இப்படியா செயல்படுவது? இந்த ஓரவஞ்சனைக்குப் பெயர்தான் ஒப்புரவுப் பேச்சா? தன்மானமுள்ள எவனும் இதை ஒப்பமாட்டான்? பொறுக்கித் தின்னும் இந்திராக் கட்சித் தலைவர்களுக்குத் தன்மானம் இல்லாமல் இருக்கலாம். நடுநிலையறிவு கூடவா இல்லாமல் போய்விட்டது?

சிங்களக் கயவர் கொடுமை நாளுக்குநாள் மிகுகிறது திம்புப்பேச்சு தொடங்கியதிலிருந்து இக் கொடுமையைப் பற்றி இராசீவ் ஒருமுறை கூட வாயே திறக்கவில்லையே! அடிப்பவனைக் கண்டித்து ஒரு பேச்சும் பேசாமல், அடி வாங்குபவனை 'அமைதியாக இரு; ஒத்துப்போ' என்று கூறிவரும் கொடுமையை என்னென்பது? சிங்களத் தாக்குதலை மறைமுகமாக ஊக்கி விடுவதும், கொடுமை நிகழ்த்தச்செய்வதும், தமிழீழப் போராளிகளை அச்சுறுத்திப் பணியச் செய்வதும், வேறு வழியில்லாத ஒப்புதலுக்கும் வற்புறுத்துவதுமே ஆகும்.

தமிழீழப் போராட்ட இயக்கத்தினரை நாடு கடத்தியது, தமிழினத்தின் மேல் தொடுத்த அச்சுறுத்தலே? உரிமைக்குப் போராடுபவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவதும்; அதன்வழி நாட்டு நுழைவுப் போராட்டத்திற்கு மக்களை எழுச்சி கொள்ளச் செய்வதுமான அதிரடி மருத்துவ முறை, இங்குள்ள தலைவர்களின் நோக்கத்தைத் திசை திருப்புகின்ற உத்திகளே!

தலைவர்களை வெளியேற்றி விட்டு, 'இங்குள்ள தந்நலக்காரர்களால் தாம் பேச்சு தடைப்படுகிறது' என்பதெல்லாம் கொடுமையான குற்றச்சாட்டு. பேச்சு தொடங்கிய பின்னரும், இலங்கைக் கயவாளிகள் தங்கள் கொடுமைகளைக் கைவிடாமல் இருப்பது இந்திய அரசியல்காரர்களுக்குத் தெரியவில்லையா?

'டெசோ' நடத்திய தொடர்வண்டிப் போராட்ட விளைவைக் கூட, இங்குள்ள இந்திராக் கட்சித் தலைவர்கள் தில்லியில் போய், இராசீவ் காந்தியைச் சந்தித்ததால் ஏற்பட்ட விளைவு என்று திசை திருப்புவதை மக்கள் உணரவேண்டும். அதிகாரமும், விளம்பரமும் வாய்த் தித்திரிக்கமும் இருந்தால், கழுதையைக் கூடக் குதிரையாக விலைபோக்கிக் காட்டலாமே!

இந் நிலையில், சில தவிர்க்கவியலாத அழுத்தம் காரணமாகத் திம்புப் பேச்சில் தொடர்ந்து ஈடுபட விரும்பும் தமிழீழப் போராளிகள், தமிழீழம் ஒன்றே என்னும் தங்கள் குறிக்கோளில் சிறிதும் நெகிழ்ச்சி காட்டாமல் இருப்பது நல்லது. அதற்கிடையில், இந்தியாவின் பேச்சுக்கு ஒத்துழைப்புத் தர விரும்பினால், முதலில் பேச்சுரைக்கு மூல அடிப்படையாக, 'பேச்சுரை முடியும் வரை இருதரப்பாரும் போராட்ட நடவடிக்கைகளை நிறுத்திவைக்க வேண்டும்' என்பதையே, இந்தியாவின் முயற்சிகளுக்கு முத்தாய்ப்பாக வைக்கவேண்டும்.

கலைஞர் அவர்களின் இன்றைய ஈடுபாடு மிகவும் மதிக்கத் தக்கதும், போற்றிக் கொள்ளத் தக்கதும் ஆகும். போராடாமல் தமிழினம் எந்தப் பயனையும் பெற்றுவிட முடியாது. போராடித்தான் எதையும் பெறமுடியும் என்னும் நிலை வந்துவிட்ட பின், நாம் பின்வாங்க வேண்டியதில்லை. ஆனல், இடையில் குறுக்கிடும் எந்த அரசியல் நலனையோ, சலுகை

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

தொடர் - 15

ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

என் முதல் ஐரோப்பியச் சுற்றுச் செலவு!

4. பாரிசு நிகழ்ச்சிகள் (தொடர்ச்சி)

ஆசிரியர் குறிப்பு: ஒரு மறுப்பு மடல்: கடந்த ஓரண்டு இதழ்களில், பாலியல் தொடர்பாகவும், அதனடிப்படையில் எழுந்த பண்பாட்டுத் தொடர்பாகவும் நம் நாட்டிற்கும் மேலை நாட்டுக்கும் இடையில் உள்ள மேடு, பள்ளங்களைச் சுட்டிக்காட்டும் வகையில், நாம், இக் கட்டுரைத் தொடரின் வாயிலாகக் கூறிவரும் சில பல கருத்துகளைக் கண்ணுற்ற ஒரு தமிழ் நல்லுள்ளம் நமக்குக் கீழ்வரும் கருத்து விளக்கங்களை எழுதிச் சில மறுப்புகளையும் வேண்டுகோளையும் தெரிவித்துள்ளது. அம் மடலை அவ்வாறே தந்து, அதில எழுப்பப்பெறும் ஐயங்களுக்குரிய விளக்கங்களைத் தந்து மேலே செல்லலாம் என்று எண்ணியுள்ளோம்.

(பலவாறான வினையழுத்தங்களுக் கிடையில், நேரத்தை ஒதுக்கிக் கொண்டு, இதுபோலும் தொடர் கட்டுரைகளை நாம் எழுதி வருவதால், இடையிடையே ஏற்படும் தொடர்த் தொய்வுகளைத் தவிர்க்க இயலாமல் போகிறது. அன்பர்கள் இக் கட்டுரைகளைச் சோர்வுறாமல் விடாமல் படித்து, இதுபோலும் கருத்தாய்வுகளில் ஈடுபட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.)

இக்கால், ஏற்பட்டு வரும் கால மாறுதல்களுக்கு இக் கருத்தாய்வுகளும், கருத்து முடிவுகளும் மிக மிக இன்றியமையாதன. நாமேதாம் உலகம் அன்று. அது பரந்துபட்டு மிக நீண்டு விரிந்து கிடக்கிறது. நாம் எங்கோ ஓர் ஊரின் மூலையில் இருந்து கொண்டு, நம் கையில் கிடைத்த நூல்களைப் படித்து விட்டு, இப்படித்தான் உலகம் இருக்க வேண்டும், இயங்க வேண்டும் என்பதாக நம்மில் பலர் எண்ணிக் கொள்கிறார்கள். அவ்வடிப்படையில் பலர் மனம் புழுங்குவதும் அழுங்குவதுமாக உள்ள அந் நிலைகளை நாம் நன்கு உணர்வோம். இருப்பினும் நம்மையும் நம் கருத்துகளையும் தள்ளி ஒதுக்கிவிட்டு, அல்லது ஏறிமிதித்துக் கொண்டு, உலகமும் உலகத்தில் உள்ளவர்களும் எங்கோ ஒரு திசையை நோக்கி மாறி மாறி ஓடிக்கொண்டிருக்கின்ற தன்மையை, நம் மனவுணர்வால் அன்றி, அறிவுணர்வால் செரித்தே ஆகவேண்டும். நம் கருத்துகளுக்காகவும், கருத்து முடிவுகளுக்காகவும் உலகமும், உலகில் உள்ளவர்களும், ஒரு நொடியும், ஓரிடத்திலும் காத்துக் கிடப்பதில்லை. பரந்துபட்ட வெளியில, எங்கோ வெறித்து நோக்கி, ஓடிக்கொண்டிருக்கும் உலகின் வேகத்துடன், நாமும் காலநிலை அறிவு நிலைகளை அதற்குத்தக விளங்கிக் கொண்டு, நாமும் அந்த ஓட்டத்துடன் ஓடாமற் போயினும், நடந்தேனும் கொஞ்சம் இணைந்து போக வேண்டும். இல்லையானால், நாம் இருந்த இடத்திலேயே இருந்து கொள்ள வேண்டியதுதான். இன்னுஞ்சொன்னால், இறந்துவிட வேண்டியதுதான். அப்பொழுதும் நமக்காக யாரும் வருந்தப் போவதுமில்லை; அழப்போவதுமில்லை. எனவே, நமக்காகவேதான் நாம் அப்படிச் செய்து கொள்ள வேண்டும்.

தமிழ்ப் புலமை பெற்ற-தமிழ் நூல்கள் கற்ற பலருக்கு, மிகப் பலருக்கு - இன்றைய அறிவியல் வளர்ச்சியின் வேகம் தெரிவதில்லை. எனவே முழு மனவியல் வளர்ச்சியையும் அவர்கள் பெற முடிவதில்லை. பண்பாடு, மரபு என்னும் மன நிலைகளிலேயே அவர்கள் ஊன்றி, ஊறக்கிடப்பதால், அறிவியலால் தக்குண்ட மனவியல், எத்தனை யெத்தனை வேற்றுமை மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கவும் அவர்களால் இயல்வதில்லை. இதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

ஒன்றை எடுத்துக் காட்டாக அவர்கள் முன் வைக்கின்றோம். உலகின் மிகு தேவை நிலைகளுள் உணவு நிலையை எடுத்துக் கொள்ளுங்கள். காலங் காலமாய் நமக்குப் பழகிவிட்ட அல்லது பழக்கப் பட்ட ஒரே வகை உணவையே நாம் உண்டு வருகிறோம். உலகில் பற்பல நாடுகளிலும் வாழும் பற்பல இன மக்கள் உலகில் உள்ள பெரும்பாலான நச்சுயிரிகளையும், புற்பூண்டு பாசி வகைகளையும் அவர்கள் விரும்பும் வகையில் நல்லுணவாக மாற்றி உண்டு வருகிறார்கள் என்பதை நாம் அறியவும் மனம் கூசுகின்றோம்; அருவருக்கின்றோம். ஆனால் மேலை நாடுகளில் சிலவிடங்களில், உயிருள்ள நத்தையினங்களையும், கிளிஞ்சல் இனங்களையும், சிறு சிறு நண்டினங்களையும் கடைகளில் அப்படியே பச்சையாக உயிருடன் விற்கிறார்கள். அவர்களை அங்கேயே வாங்கி, அப்படியே பச்சையாக, நாம் கடலைக்காயை உரித்து, மேல்தோலை நீக்கிவிட்டுக் கடலைக் கொட்டைகளை உண்பதுபோல், அவற்றின் மேலோடுகளைப் பெயர்த்தெறிந்துவிட்டு, உண்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவும் முகம் சுளிக்கின்றோம். இதனையும் விடுத்துச் சில நாடுகளில், பாம்பையும் பல்லியையும் உண்பது, நமக்கு அவர்களை மாந்தர்களாக எண்ணிப் பார்க்கவும் தயக்கத்தை ஏற்படுத்துகிறது.

உணர்வு நிலைகளும் இப்படித்தான். எல்லாவற்றுக்கும் பழக்க வழக்கமும், சூழ்நிலைகளும், தேவைகளுமே காரணங்களாகி விடுகின்றன. சாதி மதக் கட்டுப்பாடுகளிலும் 'சம்பிரதாயங்கள்' என்னும் தொன்றுதொட்ட வழக்குகளிலும் ஊறிப்போன நமக்குப் பாலியல் தொடர்பான சில மனவியல் தாக்கங்களையும், அறிவியல் உண்மைகளையும், வாழ்வியல் உத்திகளையும் கூட, வெளிப்படையாகப் பேசிக் கொள்ளவும், எழுதிப் படிக்கவும் மனங்கள் கூசுகின்றனதாம். இருப்பினும் என்னசெய்வது?

வெட்ட வெளிகளிலும், வயல் வெளிகளிலும் மறைவாக இருந்து மலம் கழித்துக் கொண்டு வந்த நாம், எல்லாரும் கூடி, நான்கைந்து சதுர அடி அறையுள்ள ஒரு சிற்றிடத்தில், ஒருவர் பின் ஒருவராக நின்று, மலம் கழித்தாக வேண்டிய, இடநெருக்கடியும், வாழ்வியல் நெருக்கடியும், மிகு தேவையும் ஏற்படும் பொழுது, என்ன செய்வது? வேண்டுமானால், மலம் கழிக்காமலேயே, அடக்கிக்கொண்டு கிடக்க வேண்டுவதுதான்! அதுவும் எத்தனை நாளைக்கு? பிறகு, நாமும் அவர்களுள் ஒருவராகிவிட வேண்டியதுதானே! எல்லாவகை உணர்வெழுச்சிகளும் இப்படிப் பட்டவைதாம்!

எனவே, ஆண் பெண் தொடர்புற்ற பாலியல் உணர்வும் இது போன்றது தான்! அது காட்டுவிலங்காண்டிக் காலத்து இருந்த நிலை வேறு. அக்கால் அது தெருக்கடை நிகழ்ச்சியாக, எல்லாரின் முன்னும் முற்றத்தில் நிகழும் நிகழ்ச்சியாக இருந்தது. பின் அது தெய்வ முன்றிலில் அல்லது வழிபாட்டு அறையில நிகழும் நிகழ்ச்சிபோல் அடக்கவொடுக்கமாகவும், அச்சப் பத்திமையுடனும் நிகழ்ந்தது. இன்றைக்கு அது படுக்கையறை நிகழ்ச்சியாக உள்ளது.

வீடு கட்டுகின்ற பொழுது, உணவு அறை, படுக்கை அறை, புழக்க அறை, வழிபாட்டு அறை, குளியல் அறை ஆகியவற்றையெல்லாம் அமைப்பதைப் போலவே, கழிவறை, சாய்க்கடைகளையெல்லாம் அமைக்கின்றோம். அக்கழிவறைக்கும் சாய்க்கடைக்கும் முதன்மை கொடுத்து, ஒருபுறமாக அவற்றை ஒதுக்கிவிடாமற் போனால், பிறகு வீடெல்லாம் நாறிப்போகுமளவிற்கு, நட்ட நடு வீட்டிலேயே அவற்றைப் பார்க்க வேண்டிப் போகுமே! அப்பொழுது நாம் அவற்றினின்று விலகிப் போகவோ, அவற்றை விலக்கவோ இயலாமல் போய் விடுமே! அப்பொழுது என்ன செய்வது? அதற்காகத் தான், அதன் இன்றியமையாமையையும், தேவைப் பெருக்கையும், கால வளர்ச்சியையும் உணர்ந்து, அதற்கும் முறைப்பட நம் வாழ்வியலில் ஓர் இடத்தை ஒதுக்கியாக வேண்டிய கட்டாய நிலைக்கு நாம் வந்திருக்கின்றோம் என்று எண்ணிக்கொள்ள வேண்டும். இந்நிலையில் நாம் அருவருப்படைந்தாலோ, பின் தங்கினாலோ, நமக்கோ பிறருக்கோ ஒன்றும் ஊறு நேர்ந்துவிடப்போவதில்லை. நாம் பார்க்க விரும்பாத ஒரு காட்சிக்காக நாம் கண்களை மூடிக் கொள்ள வேண்டியதுதான்! உலகின் கண்களையோ காதுகளையோ, அல்லது வாய்களையோ மூட நாம் யார்? இனிப் புறக் கருவிகளாகிய அவற்றையே மூட இயலாதபொழுது அகவுணர்வுத் தாக்கமாகிய, பாலியல் உணர்வு எழுச்சிக் கோளாறுகளை நாம் நெருங்கிவிட இயலுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகின்றோம். இது பற்றிப் பின்னும் விரிவாக விளக்குவோம்.

இப்பொழுதைக்கு அன்பர் எழுதிய மடலைப் பார்ப்போம். மற்றபடி, இவ்வாறெல்லாம் நாம் கூறி இவ்வறிஞர் எழுதிய கருத்துகளைப் புறக்கணிக்க வேண்டும் என்பது நம் நோக்கமாக இருத்தல் முடியாது. அது பற்றியும் சில விளக்கங்களை நாம் பெற்றாக வேண்டும். மடலைப் படியுங்கள்.

எம் போன்றோர் மதிப்புக்குரிய ஐயா, பெருஞ்சித்திரனார் அவர்கள் திருமுன் பார்வைக்கு.

'ஐந்து நாடுகளில் முப்பது நாள்' என்ற கட்டுரையில் மணிமொழியாரின் திருக்கோவையின் கண் 244-ஆம்பாடலில் உள்ள 'தூண்டா விளக்கனையாய், என்னையோ அன்னை சொல்லியதே' என்ற பகுதி-வரி உங்கள் தமிழ் தழீஇய நன் நெஞ்சத்தைச் சிந்திக்கத் தூண்டியது சரியே. ஆனால் அச் சிந்தனை மேனாட்டு முறைக்கும் அந்நாட்டுப் பழக்க வழக்கங்கட்கும், ஒழுக்க முறைக்கும் பண்பாட்டுக்கும் வளர்ந்து வரும் மாந்த இயல் மனவளர்ச்சிக்கும் நமது முந்தைய இக் கருத்துப் பொருந்தாது என்று எம் போல்வார் உணருமாறு அமைந்துள்ளது.

செவிலிக்கு எதிரே வருபவர் தலைவனும் தலைவியும். தன் மகளும் அவள் காதலனும் ஆகிய இருவரில், தலைவன் தலைவனை நன்றாய்க் கவனித்தான். அவனைக் கவனித்துப் பார்த்து ஆகவேண்டுவது ஒன்றுமில்லை; அதனாலும், நாம் என் அவனைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தாலும் அவளை அவன் கூர்ந்து பார்க்கவில்லை. தன்னோடு வந்த தலைவி அவளை நன்கு கவனித்தும், அவளொடு வரும் பிறனைப் பார்த்து என்ன ஆகவேண்டி இருக்கிறது என்ற எண்ணத்தாலும் நம்மைப்போல் நம் தலைவியும் அவளை நன்கு கவனித்துப் பார்த்திருப்பாள் என்று நினைத்து அவன் அவ்வாறு கேட்டான் என்று பொருள் கொண்டால் தவறு ஏற்படாது.

மேலும் பெண்கள் பிறரைத் தவறான நோக்கொடு நோக்கும் போக்கு சிலரிடம் அமைந்த ஒன்றுதான். அது தீது என உணர்ந்து மனத்தை நன்னினைவுக்குக் கொண்டுவருவதுதான் நல்லநிலையை உருவாக்கும். இம் மன இயக்கங்கள் சிதறும்போது, தான் மாந்தன் மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காகவே 'சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ நன்றின் பால் உய்ப்பது அறிவு' எனவும், 'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' எனவும் 'அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப' எனவும் பெருமக்கள் தெருட்டி உள்ளனர்.

பருவம், மனநிலைகள் காரணியமாகத் தாழ்வான நோக்குக் கூடாது என்பதே சான்றோர் கொண்ட கோட்பாடு ஆகும். பிற தேயங்களில் ஒருத்தி ஐந்து பேரை மணந்து வாழ்தலும், ஒருவன் பல மகளிரை மணந்து வாழ்தலும், பிறன் மனைவியாளைக் கைப்பிடித்து நாட்டியம் ஆடுதலும் தமிழ் மரபுக்கு ஏலாதவை, என்பதைத் தெரிந்த தாங்கள், பிற பெண்களைத் தவறான பார்வை பார்த்தால் தவறே என்பதையும் தீ ஒழுக்கம் என்றும் அறிந்தவர்களே!

தமிழ்ப் பண்பாட்டு ஒழுங்குமுறையைத் தங்கள் மேலான கொள்கைகளுள் ஒன்றாக வைத்திருந்தும், ஒருவன் ஒரு பெண்ணைப் பாராது செல்வது இக்கால அறிவியல் மனவியல் வளர்ச்சி நிலைக்குப் பொருந்தி வருமா என்று கேட்பதைக் கொஞ்சம் மன அமைதியோடு மறு சிந்தனை செய்யப் பெரிதும் பணிவோடு வேண்டிக் கொள்கிறேன். திருமணமான ஆணும் பெண்ணும் பிறரைக் கண்ணால் பார்த்தல் கூடாது என்பது தவறான கருத்து. தீய நோக்கோடு பார்த்தல் தகாது என்பதே திருக்கோவை அடிக்குறிப்பாக உணர்த்தும் கருத்தாகும். நான் உங்கள் உயர்ந்த சிந்தனைக்குச் சிக்கல் உண்டாக்க நினைக்கவில்லை. யானைக்கும் அடி சறுக்கும் என்பதால் 'இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே கெடுக்கும் தகைமையவர்' என்று தங்களின் மேலான நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

மற்றும், மக்கள் ஒருவர் மற்றவரைப் பார்ப்பதே தவறு என்னும் கருத்தை மணிமொழியார் இருக்கட்டும், சிற்றறிவுடையோரும் கூறாரே' மேலும் தாயைப் பார்ப்பது, மகளைப் பார்ப்பது, நண்பரைப் பார்ப்பது, மதிப்பிற்குரியாரைப் பார்ப்பது, அயலாரைப் பார்ப்பது, முதலிய பார்வைகள் வேறுபடும். சிலரைக் காணும்போது கவனிப்போம்; சிலரைக் காணும்போது கவனியோம். அவைபோல இப்பார்வையும் சரியாகக் கவனியாத பார்வை. அதனால் 'அன்னை சொல்லியது என்னையோ?' என்று இலக்கிய நடையில் ஆசிரியர் வெளியிட்டிருக்கக் கூடுமன்றோ? கிரேக்கப் போரிலக்கியங்களுள் சிறு அகவையினனைப் பெரியவள் காதலிப்பதாக இலக்கியம் உளவாம் என வ. சுப. மா. கூறுவர்.

மாந்தன் முக்குண வயப்பட்டவன். நம் சான்றோர்கள் நெறிப்படுத்திக் கூறியவற்றை அவர்கள் நோக்கில் நோக்க வேண்டுமே தவிர அறிவியல் அடிப்படையில் ஒப்பிடுவது ஏற்புடைத்தன்று என்பது என்போன்றோர் கருத்து.

சால்பு பல உடைய தமிழ்ச்சான்றோய்! என் சிந்தனையில் பட்டத்தைத் தங்கள் திருமுன்னர் படைக்கின்றேன். திருவுள்ளம் யாதோ? பண்டு நூல் செய்த சான்றோர் குழுவாய ஒழுக்கமே தங்கள் நோக்கமாக கொண்டுள்ளனர். சான்றோர் சென்ற தடத்திலேயே தாம் சென்று பார்க்கவேண்டும்! மாறுபடலாகாது என்பதே எம் போன்றோர் உள்ளக் கருத்தாகும்.

தங்களன்பிற்குரிய
புலவர் சு. சிவசங்கு, ஏரல்.

(தொடரும்)

உரிமை பெற்ற மக்களிடமே பண்பாடு நிலைக்கும்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3] இதழ் எண்: 63 (8-9-1985) [பகுதி 31-33

ஓநாய் 'புத்தம்' பேசுகிறது!

அண்மையில், இலங்கைக் குடியரசுத் தலைவரும், உலகப் பெரும் மாந்தக் கொடுமையாளரும், உலகப் பெரும் பொய்யரும் ஆகிய செயவர்த்தன, அனுராதபுரத்தில் நடந்த தேசிய விளையாட்டு விழாவில் பேசிய பேச்சை உலக அறிஞர்கள் மிக உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். அவர் பேச்சு மிகக் கரவானது; பொய்யானது; ஏமாற்றுத்தனமானது. அந்த அரசியல் ஓநாய் ஆட்டுக் குட்டியைப்போல் ஏதோ அறம் பேசியுள்ளது. அங்குப் பேசுகையில், தமது நாட்டில் அஞ்சத்தகுந்த வன்முறை விரைவில் மறைந்துவிடும் என்றும், தீய செயல்கள் அதிக காலம் நீடிக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். அத்துடன் நில்லாது, தம்மை ஏதோ புத்தனைப்போல் கருதிக்கொண்டு, வன்செயல்களால் அந்த நகர மக்கள் அடைந்த தொல்லைக்கு அவர் இரங்கல் தெரிவித்துள்ளார். அதோடு, அமைதியை விரும்பும் மரபிலும் மதத்திலும் தாம் தோன்றியிருப்பதாகக் குறிப்பிட்டு, 1977 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை சிறையாளி எவரும் தம் ஆட்சியில் தூக்கிலிடப்படவில்லை என்று புத்தம் பேசியுள்ளார். மாந்தனோ வேறு உயிர்களோ அரத்தம் சிந்துவதைத் தாம் விரும்பவில்லை என்றுவேறு அவர் அறமொழி புகன்றிருக்கிறார்.

அஞ்சத் தகுந்த வன்முறை (பயங்கர வாதம்) - என்பதாக, யாரை எண்ணிக்கொண்டு அவர் குறிப்பிட்டாரோ, அவர்களைவிட அந்தச் சொல் அவருக்குத்தான் மிகவும் பொருத்தமாக இருக்கமுடியும் என்பதை அவரே நன்கு உணர்வார். உலகம் தோன்றியதிலிருந்து செயவர்த்தனவைப்போல் வன்கொடியவர் ஒருவர் தோன்றியே இருக்கமுடியாது என்பதை இங்குள்ள இந்திராக கட்சியினர் தவிர அனைவருமே நன்கு அறிவர். அவ்வாறிருக்க இவர் வேறு யாரையோ அதற்குப் பொறுப்பாக்கிப் பேசியிருப்பது மிகவும் கரவானது.

இனி, அவர் அமைதியை விரும்பும் மரபிலும், மதத்திலும் தோன்றியவராம். இதை யார் நம்பமுடியும்? ஓரினத்தில் மட்டும் அவர் தோன்றியிருக்கவில்லை, ஒரு கலப்பினப் பிறவி (Hybrid) அவர். மேலும் அவர் புத்தமதத்தைச் சார்ந்தவர் என்றால் புத்த மதத்திற்கே இழுக்கு! அவரை விட புத்தமதத்திற்கு ஒரு கொடியவர் கெட்ட பெயரை வாங்கிக் கொடுத்திருக்க இயலாது. அந்த அளவுக்கு அவர் ஒரு மாந்தக் கொடியவர்.

அவர்தாம் சொல்லுகிறார், '1977 ஆம் ஆண்டிலிருந்து தாம் எவரையுமே தூக்கிலிடவில்லை' என்று, இதைவிட உலகப் பெரும் புளுகு இதுவரையிலும் எவருமே கூறியிருக்க முடியாது. தூக்கிலிடுவது மட்டுந்தாம் கொலை அல்லது கொடுமை என்று கருதியிருக்கிறாரா, அவர்? சுட்டுக் கொல்வது, வெட்டிக் கொலை செய்வது, உறுப்புகளைச் சிதைத்து அணு அணுவாய் உயிரைப் போக்குவது, தீ வைத்துக் கொளுத்துவது, பெண்களைக் கற்பழித்துச் சிதைப்பது, எரிகின்ற தீயில் குழந்தைகளைத் தூக்கி எறிவது முதலிய கொடிய கொலைச் செயல்களெல்லாம், தூக்கிலிடும் கொடுமைக்கு ஈடாகாவோ? இவற்றை விடவும் கொடிய செயல்களை இனி உலகில் எவருமே செய்துவிட முடியாது என்பதை வரலாறு கூறும்.

ஆனால், நமக்கு வியப்பானது அல்லது விளங்காதது என்னவென்றால், இவ்வாறான கொடிய செயல்களுக்கெல்லாம் உறைவிடமான செயவர்த்தனவை, ஏன் இந்திய ஆட்சித் தலைவர்கள் மட்டும் மிகவும் புனிதராகக் கருதுகிறார்கள் என்பதுதான். மறைந்த இந்திரா காந்தியும் சரி, விரைவில் மறைப்போகிற இராசீவ் காந்தியும் சரி, செயவர்த்தனவை ஒரு புத்தன் என்றே கருதி வந்திருக்கிறார்கள். ஒருவேளை அவர்களும் செயவர்த்தனவின் கரவான அரசியல் தந்திரங்களும், பொய் புளுகுப் பேச்சுகளும், கொடிய வன்முறை வாலாட்டங்களுமே நல்ல மரபான, மத அரசியல் முறைகள் என்பதாகக் கருதியிருக்கிறார்களோ என்னவோ? எப்படியாயினும் உண்மை உறங்கலாம்; ஆனால், செத்துவிடாது என்பதைச் செயவர்த்தனவானாலும், இராசீவ் ஆனாலும் அழுத்தமாகப் புரிந்து கொள்ளட்டும்!

அவரைப் பின்பற்றித் தமிழகமே எழுச்சியுறுவது திண்ணம்! அத்தகைய வீர வெற்றிப் போராட்டத்தை அவரே முன்னறிவிக்க வேண்டும். மற்றபடி உதிர்ந்து போகும் வெறும் அரசியல் சில்லுண்டி நலன்களுக்கு அவர் கருத்துச் செலுத்துவது அவருக்குத் தாழ்ச்சியையே கொடுக்கும்.

நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

- பெருஞ்சித்திரனார்

இந்தி வெறியர்களுக்கு இதுகூடவா விளங்கவில்லை!

நடுவண் ஒலிபரப்புத்துறை அமைச்சர் வி.என். காட்கில்: "தொலைக்காட்சி இந்தி நிகழ்ச்சிக்கு புதுவையில், தமிழகத்தில், நல்ல வரவேற்பு! தொலைக்காட்சியில் நடைபெறும் "ஹம் லோக்" என்னும் இந்தி நாடகத்தைச் சென்னை, பாண்டிச்சேரியில் 60 விழுக்காட்டிற்கும் அதிகமான மக்கள் பார்த்துச் சுவைக்கின்றனர். மற்ற இந்தி நிகழ்ச்சிகளுக்கும் நல்ல வரவேற்பு உண்டு.

எங்களின் கருத்து: முன்னாள் இந்தியத் தலைமை அமைச்சர் சுட்டுக் கொல்லப்பட்ட பொழுதுங்கூட, தமிழக மக்கள் மிகவும் ஆர்வத்தோடு, 80 விழுக்காட்டினருக்கும் மேலாகத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அந் நிகழ்ச்சிகளும் ஆங்கிலத்திலேயும், இந்தியிலேயுமாக நடத்தப்பெற்றன என்ற கணக்கில் 80 விழுக்காட்டினர் சுவைத்துப் பார்க்கின்றனர் என்பதற்காக தலைவர்கள் ஒவ்வொருவரையும் சுட்டுக் கொன்று விடுவது சரியா? மக்களிடம் இந்தி மொழி மட்டுமன்று; ஆப்பிரிக்க மொழியிலேகூட ஒரு படமோ, திரைப்படமோ காட்டினால் அதை அவர்கள் பார்த்துத்தான் திருவார்கள். கலை, இசை திரைப்படம் என்பனவற்றிற்கு மொழி ஒரு தடையன்று.

மொழியே சிறிதும் விளங்காத காட்டு மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் செய்திப் படங்களைப் பார்க்கின்ற மக்கள், அக் காட்டு மக்களின் வாழ்க்கையை ஆர்வமாகப் பார்க்கின்றனர் என்றால், அவர்கள் மொழியையும் ஆர்வமுடன் விரும்புகிறார்கள்' போற்றுகிறார்கள், வரவேற்கின்றனர் என்று பொருளன்று.

வலுக் கட்டாயமாக இந்தி மொழியைத் திணிப்பது என்பது, வலுக்கட்டாயமாகத்தாயிடத்திடமிருந்துகுழந்தையைப் பிரித்து வேறொருவரிடத்தில் சிறையிலடைப்பது போன்றதாகும். ஒற்றுமை பேசும் விலங்காண்டிகளுக்கு (மிருகங்களுக்கு) இதுகூட விளங்கவில்லையா?

— சூட்டுக்கோல்.

புதிய புரட்சி காலிசுத்தான்!

இந்தியாவில் தனி நாடு கேட்டுக் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் போராடிவரும் காலிசுத்தான் விடுதலைப் போராளிகள், தென் அமெரிக்காவின் தென் கோடியில் உள்ள ஈகுவடார் எனும் நாட்டில் 30 ஆயிரம் குறுக்கம் (ஏக்கர்) நிலம் விலை கொடுத்து வாங்கியுள்ளனர்.

இந்த நிலப்பரப்பில் கல்சா நகர் எனும் பெயரில் புதிய பெரிய நகரம் உருவாக்கவும் இந்த நகரத்தில் 10 சிறு சிறு நகர்கள் உருவாக்கவும் அப்படி உருவாக்கப்பட்ட புதிய கல்சா நகரில் 10 ஆயிரம் சீக்கியக் குடும்பங்களைக் குடியேற்றி அதைத் தனி நாடாக (காலிசுத்தானாக) அறிவிக்கவும் உள்ளதாக இலண்டனில் உள்ள காலிசுத்தான் தலைவர் சவுக்கான சிங் அண்மையில் ஒரு நேருரையில் கூறியுள்ளார்.

அப்படி அறிவிக்கப்பட்டுள்ள காலிசுத்தானில் ஈகுவடார் நாட்டுச் சட்டங்கள் செயல்படா எனவும், புதிய காலிசுத்தான் சட்டங்களும், சீக்கிய மதச் சட்டங்களும் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும் எனவும் கூறியுள்ளார், திரு. சவுக்கான்சிங். மலரும் ஈகுவாடார் நாட்டின் காலிசுத்தானை தனி நாடாக ஏற்றுக்கொள்ள தென் அமெரிக்காவில் ஒரு நாடும், வட அமெரிக்காவில் ஒரு நாடும் தென் கிழக்காசியாவில் ஒரு நாடும் அணியமாக உள்ளதாகவும், அந்நாட்டின் முதல் குடியரசுத் தலைவராக சவுக்கான் சிங்கே இருப்பார் எனவும் கூறிய சவுக்கான் இதற்கென ஈகுவாடார் தூது குழு ஒன்று தம்மை இலண்டனில் சந்தித்துப் பேசியதன் விளைவே மேற்கண்ட முடிவு எனவும் கூறியுள்ளார்.

— வியனரசு

(முதல் பக்கத் தொடர்ச்சி)

யையோ நாம் புறக்கணிக்க வேண்டும். கலைஞர் தொடர்வண்டிப் போராட்ட முடிவு பற்றியும், அடுத்த போராட்டத் தொடக்கம் பற்றியும், அண்மையில் செய்தியாளர் கூட்டத்தில், தெரிவித்த, ',உரிமைத் தமிழீழம்தான் ஈழத் தமிழர்களின் நலன் காக்கும் ஒரே வழி என்பது 'டெசோ'வின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். ...தமிழ் ஈழத்தை ஆதரிப்பதும், ஈழத்தமிழர் நலனுக்காகக் கவலைப்படுவதும் பிரிவினைக் கொள்கை என்றால், நாங்கள் அந்தக் குற்றத்தை (குற்றமா அது? கொடுமை, நீக்கம், உரிமை மீட்பு குற்றமாகுமா? அதை ஏன் குற்றம் என்று கலைஞர் ஒப்புக்கொள்ள வேண்டும்?) செய்துகொண்டே இருப்போம்" என்று கூறியிருக்கும் கருத்தை தமிழர் அனைவரும்வரவேற்கவேண்டும்;

கலைஞர் அவர்கள் எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை. "உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி இடைக்கண் முரிந்தார் பலர்" - என்னும் திருக்குறளில், தன் வலிவை உணராமல், தன் அளவு மீறிய வினையில் ஈடுபடுவது எவ்வளவு அறியாமையோ, அவ்வளவு அறியாமை மிக்கது, தன் வலிவை உணர்ந்தும் ஒருவர் அவ்வினையில் ஈடுபடாமல், செய்தக்க செய்யாமல், காலத்தை வீணாக்குவது என்பதை கலைஞர் உணர்தல்வேண்டும். தமிழினத்தின் உயிரை தம்மின் உயிராகக் கலைஞர் கருதவேண்டும். அரசியல் பதவிபெறும்முயற்சியில்அவ்வுயிர் வீணாய்ப்போவதை விட, தமிழின உரிமை மீட்பு முயற்சியில் அது போவது, அவர்க்கு எவருக்குமே இல்லாத வரலாற்றுப் பெருமை தருவதாகும். எனவே, தமிழீழச் சொள்கையில் அவர் சிறிதும் தளர்ச்சி காட்ட வேண்டியதில்லை. நேற்று வந்த பழனியாண்டிகளின் அச்சுறுத்தலுக்கும் இளைஞர் இந்திராப் பேராயக் குட்டித் தலைவர்களின் மிரட்டலுக்கும், கலைஞர் அவர்கள் பின் வாங்கவேண்டியதில்லை. தங்கள் தந்நலத்துக்காகத் தமிழினத்தையே அடகு வைக்கத் துணிந்துவிட்ட அவ்வின நலக்கேடர்களின் குருட்டுப் போக்குக்கு ஓர் இறுதி முடிவு வரும்.

தனித்தமிழ் நாட்டுப் போராட்டத்தை அல்லது கோரிக்கையை முன்னெடுத்துச் செல்ல இதுவே தக்க நேரம். அவ்வாறான ஒரு தக்க போராட்டத்தைக் கலைஞர் நேரம் பார்த்து அறிவிப்பாரானால்,

(தொடர்ச்சி முதல் பத்தியில் பார்க்க)

செப். 22-இல் இந்தி அழிப்புப் போராட்டம்!

இந்தி என்பது ஒரு மொழி மட்டும் அன்று. அஃது இந்த நாட்டின் ஆளும் பிரிவினர் தம் அடிமை மக்களின் அடிமை நிலையைக் கணக்கெடுக்கும் அளவுகோள்.

அதைத் திணிப்பதன் வழி ஏற்படும் எதிர்ப்பை வைத்தே அவர்கள் பிற தேசிய இனங்களின் அடிமைத்தனத்தைக் கணக்கெடுத்து வைத்துக் கொள்கின்றனர்.

1965-இற்கு முன்பாக 1947-இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் நிலையையும், அன்றைக்குத் திணிக்கப் பெற்றிருந்த இந்தியின் அளவையும், பின்னர் 1965, 1970 1975, 1980 இன்று 1985 வரை அதே வகைக் கணக்கீடுகளையும் பார்த்தால் தமிழன் எந்த அளவு தாழ்ந்து அடிமைப்பட்டுப் போனான் என்பது நன்கு விளங்கும்.

இன்றைக்குத் தமிழ்மொழியால் பயனே இல்லை என்றும்; காசுக்கு உழைக்கும் நடிகைகள் எல்லாம் 'தமிழை நான் வெறுக்கிறேன்' என்று நேருரை கொடுக்கும் அளவிற்கும், காசுகள், உருபாத்தாள்கள், தொடர்வண்டித் துறை, அஞ்சல் துறை, பிற நடுவண் அரசுத் துறைகள், தொலைக்காட்சி, வானொலி இவற்றுள் உட்புகுந்து பேயாட்டம் ஆடித்திரியும் இந்தியை இன்றைக்கும் எழுத்தில் மட்டும்தான் நம்மால் அழிக்கமுடிகிறது என்பதை எண்ணும் பொழுதும் மிகவும் கவலையாக உள்ளது.

1977-இல் திராவிடர் சழகம் கூட்டிய இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்குப் பின்னும், இந்தி எதிர்ப்புப் பணி என்பது என்றைக்கும் இருக்கும் என்று நெஞ்சைத் தட்டிக் கொள்ளும் நாம், இந்தித் திணிப்பு நிலையும் என்றைக்கும் இருக்கிறதே என்பதை எண்ணிப் பார்க்கிறோமா?

இந்தியை எதிர்ப்பது என்பதும், இந்தி எழுத்துகளை அழிப்பது என்பதும் கடுமையான உள்நோய்க்கு மென்மையான மேல் பூச்சு மருந்து பூசுவது போன்றதே ஆகும்.

ஆக நாம் வெட்டி வீழ்த்தவேண்டிய வேரை வீழ்த்தி, கட்டிக் காக்கவேண்டிய இனத்தைக் காக்க நம் தமிழ்நாட்டை முட்டி மோதியேனும், பெற்றே தீர்வது என்பதைத் தவிர்த்து வேறு எவ்வகையினும் எதையும் தீர்த்துவிட முடியாது.

இருப்பினும் செய்ய வலிவிருந்தும் செய்யாமல் சோம்பி தந்நலம் நாடும் கட்சிகளுக் கிடையிலும், செய்ய வலிவில்லாமல் உள்ளத்தில், கொள்கையில் செயல் திட்டங்களை அடைத்து வைத்துக்கொண்டிருக்கிற இயக்கங்களுக்கிடையிலும், திராவிடர் கழகம் வரும் செப். 22 ஆம் பக்கல் இந்தி அழிப்புப் போராட்டத்தைக் கையிலெடுத்தது மகிழ்ச்சியே.

ஆனாலும், அது வெறும் எழுத்து அழிப்புப் பணியோடு நின்றுவிடாமல தமிழினத்தின், தமிழ் நிலத்தின் அடிமைத் தனத்தின் விலங்கொடிப்புப் போராட்டமாக வளர்த்தெடுக்கப் பெறவேண்டும். அதுவே இவ் வினத்திற்கும் பயன் தரும், மற்றது அவ்வியக்கத்திற்கே பயன் தரும் என்பதை அக்கறையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

-சூட்டுக்கோல்

தமிழீழச் சிக்கல் தீரத் தமிழீழம் ஒன்றே வழி!

திரிக்கப்படும் வரலாறு!

கடந்த மே 6-இல் பேராயக் (காங்கிரசு) கட்சியின், நூற்றாண்டு விழாவைத் தொடக்கி வைத்துப் பேசிய, இந்தியத் தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி இந்நாள் இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க முகாமை நாள் என்றார்

இதற்கு அவர் கூறிய காரணம், மே 6 ஆம் நாள்தான் இந்தியத் தாயின் இரு பெரும் புதல்வர்கள் (Two Great Sons of the Land) பிறந்த நாள் ஆகும் என்றார்.

இரு பெரும் புதல்வர்கள் என்று அவர் குறிப்பிட்டது, தம் பாட்டனார் மோதிலால் நேருவையும், இரவீந்திரநாத தாகூரையுமே!

வரலாற்றுப்படி பார்த்தாலும், 'சாந்தி நிகேத'னில் உள்ள குறிப்பேடுகளின் படியே பார்த்தாலும், இரவீந்திரநாத் தாகூர் பிறந்தது மே 6-இல் அன்று, மே 8-இல் தான்.

இச் சிறு தவற்றை வேண்டுமானால் மன்னித்து விடலாம். ஆனால் இவ்விருவருக்கும், பேராயக் கட்சிக்கும் என்ன தொடர்பு இருந்தது என்பதைப் பார்த்தால், இவர்களின் சூழ்ச்சி நன்கு புலப்படும்.

வரலாற்றுப்படி, இரவீந்திரநாத தாகூருக்கு இந்திய தேசியப் பேராயத்தோடு சிறு தொடர்புகூட இருந்தது இல்லை. இந்திய விடுதலைப் போராட்டத்தில் கூட அவர் சிறிதளவேனும் பங்கேற்றதுமில்லை.

அவர் இந்திய நாட்டுப் பாடலை எழுதியதாகக் கூறலாம். ஆனால், அப்பாடல் எவ்வகை நாட்டுப் பற்றோடும் எழுதப் பெறவில்லை. ஐந்தாம் சியார்சு மன்னர் இந்தியாவிற்கு வருகை தந்தபோது அவரை வாழ்த்திப் பாடிய பாடலே 'சன கன மன...'

மே 6-ஆம் பக்கலைப் பேராயக் கட்சியின் நூற்றாண்டு விழா நாளாக அறிவித்ததே அது நேரு வழி முறையினரின் தொடக்க மாந்தரின்-மோதிலால் நேருவின் பிறந்த நாள் என்பதற்காகத்தானும்!

நூற்றாண்டு விழா விளம்பரங்களில்கூட "காங்கிரசு நூற்றாண்டு விழா மே 6, மோதிலால் நேருவின் பிறந்த நாளில் தொடக்கம்...." என்றே குறிப்பிட்டிருந்தார்கள்.

அதே விளம்பரத்தில் "1885 - டிசம்பர் 28 ஆம் நாள் (காங்கிரசு தொடக்க நாள்) மோதிலால் நேரு (24 அகவை வழக்கறிஞர்), அவருடன் இந்தியாவில் பல பகுதிகளிலுமுள்ள பெருமகர்கள் பலர், பம்பாயில் கூடினார்கள். இதுதான் காங்கிரசின் முதல் கூட்டமாகும்" எனக் குறிப்பிட்டிருந்தது.

இவ் விளம்பரப்படி, 24 அகவையாகியிருந்த மோதிலால் நேருதாம் பேராயக் கட்சித் தொடக்கத்திற்கு முழு முதற் காரணமானவர் என்பது மிகத் திறமையாகக் கூறப்பெற்ற பொய்யாகும்.

பேராயக் கட்சியின் தொடக்கக் காலத் தலைவர்களாக இதுவரை நாம் கூறிவந்த ஏ. ஓ. இியூம்சு, தாதாபாய் நவுரோசி, வழக்கறிஞர் இராணடே இன்னும் பலரை இகழ்வுபடுத்தியிருக்கிறார்கள் இவ் விளம்பரத்தின் மூலம்!

வரலாற்று ஆசிரியர் எவரேனும், வரலாற்று நூல் எதுவும், இதுவரை மோதிலால் நேருவை இந்தியத் தேசியப் பேராயத்தின் தொடக்கத்தோடு குறிப்பிட்டு எழுதியது கிடையாது.

உண்மையில் மோதிலால் நேரு அந்தக் காலத்தில் ஆங்கிலேயர்களின் கீழ், இந்திய நாட்டு மக்கள் பட்ட கொடுமைகள்பற்றி அக்கறை கொண்டதும் இல்லை.

அவர் ஆங்கிலேயருடனே அதிகம் தொடர்பு வைத்திருந்தார். தம் மகனை இந்தியப் பள்ளியில் படிப்பிக்க வைக்காமல், ஆங்கிலேய ஆசிரியர் ஒருவரைத் தனியாக வீட்டில் வைத்தே கல்வி கற்பித்தார். ஆங்கிலேயப் பெருமிதத்துடனே தம் மகன் நடப்பதையே மோதிலால் விரும்பினார். கேம்பிரிட்சு பல்கலைக் கழகப் படிப்பிற்குப் பிறகு, நேரு அரசியலில் நுழைவதைத் தொடக்கத்தில் அவர் எதிர்க்கவே செய்தார்.

எல்லாவற்றையும் விட, பேராயக் கட்சியின் முகாமையான சூழலில், 'கயா'வில் நடந்த கூட்டத்தில் பேராயக் கட்சியைவிட்டு அவர் வெளியேறினார். பேராயக் கட்சியைவிட்டு வெளியேறிய முதல் மாந்தர் மோதிலால் நேருதான்!

இத்துடன் நில்லாமல், சி. ஆர். தாசு, விட்டல் பாய் படேல், மாளவியா, செயகர் போன்றவர்களுடன் சேர்ந்து பேராயக்கட்சி (Congress Khilafat Svaraj Party) எனும் தனிக் கட்சியை 1922-இல் தொடங்கினார்.

இவற்றை வைத்துப் பார்க்கும்பொழுது, பேராயக்கட்சி நூற்றாண்டு விழாவை, மோதிலால் நேருவின் பிறந்த நாளில் கொண்டாடியதாகக் கூறிய காரணம், நேரு குடும்பத்தைப் பற்றியும், அவர்கள் நாட்டுக்கும், கட்சிக்கும் ஆற்றியதாகக் கூறப்படுபடுபவற்றையும், மக்கள் தொண்டையில் திணிப்பதற்காகவே இருக்கமுடியும் என்பது விளங்கும்.

நன்றி: 'குடிசை', மே- ஆகத்து, 85.

இதுதான் இந்திய நாடு...!

அண்மையில் 35,000 அமெரிக்கக் கோதுமை மூட்டைகள், கொச்சி துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது. அக் கப்பலிலிருந்து இறக்கப்படவேண்டியிருந்த கோதுமை 1,44,400 அயிரச்(கிலோ கிராம்)சிரடை.

—கொச்சித் துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்ததினால், மூட்டைகளை இறக்க முடியவில்லை. எனவே, கள்ளிக்கோட்டைக்கு அருகில் உள்ள பெய்பூருக்குக் கப்பல் அனுப்பப்பட்டது.

மூட்டைகளை இறக்க காலதாமதமானதால் கோதுமை கெட்டுப் போய்விட்டது, முடிவில் கடலிலேயே கொட்டினர்.

இழப்பு இதோடு போகவில்லை...:

அமெரிக்காவிலிருந்து இலவயமாக வந்த கோதுமை மூட்டைகளைக் கடலிலே கொட்ட ஆன செலவு உருபா இரண்டு இலக்கம்!

கிடைக்கிற இலவய உணவையும் வீணடித்துவிட்டு, மேலும் இழப்பாக இலக்கணக்கில் செலவு செய்ய வேண்டுமா?

என்னே இந்திய நாடு!?

- நன்றி: 'தினமணிக்கதிர்', (11-8-'85)

திருச்சியில் அருவருப்பான (ஆபாசக்)கலை இலக்கிய எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

தி.பி. 2016, கடகம் 12 ஆம் பக்கல் (27-7-85) காரிக்கிழமை, உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், மக்கள் கலை இலக்கியக் கழகம் ஆகியவற்றின் சார்பில் திருச்சிராப்பள்ளியில் அருவருப்பான (ஆபாசக்) கலை இலக்கிய எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. அன்று மாலை 6 மணிக்கு மக்கள் கலை இலக்கியக் கழகத்தைச் சேர்ந்த திரு குயிலன் தலைமையில், திருச்சி தூய வளனார் (St. Joseph's) கல்லூரி வாயிலிலிருந்து புறப்பட்ட ஊர்வலம், தெப்பக்குளம், மேலரண்சாலை, காந்தி அங்காடி வழியாகச்சென்று, பாலக்கரை அருகேயுள்ள 'பிரபாத்' திரை அரங்கத்தின்முன் வந்து முடிவடைந்தது. கைக்குழந்தைகளுடன் தாய்மார்கள் பலரும் கலந்து நூற்றுவர் பங்கேற்ற இவ் ஊர்வலத்தில், கைக்குழந்தைகளுடன் தாய்மார்கள் பலரும் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில், "உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் வாழ்க!" "மக்கள் கலை இலக்கியக் கழகம் வாழ்க!" 'அருவருப்பான கலை இலக்கியத் திரைப்படக் குப்பைகளை ஒழிப்போம்', 'பார்ப்பனீய எழுத்துப் பரத்தையரான, சுசாதா, சாண்டில்யன், சிவசங்கரி, இந்துமதி முதலானோரை நாட்டை விட்டே விரட்டுவோம்', 'தரகு முதலாளியரின் கைக்கூலி இதழ்களைப் பொசுக்குவோம்' என்றவாறு, திரு. ஈகவரசன், திரு. தமிழ்மணி ஆகிய இருவரும் முழங்க, ஊர்வலத்தினர் உரத்தொலித்தது திருச்சி நகரையே உலுக்கியது. உ.த.மு.க-வைச் சேர்ந்த புலவர். நாவை சிவம், மாவட்டச் செயலர், திரு. நாரா. மகிழ்நன், பொருளர் குழந்தை ஈகவரசன், தமிழரிமா ஆகியோர் ஊர்வலத்தில் பங்கேற்றுச் சிறப்பளித்தனர்.

இறுதியில் உ.த.மு.க. துணைப் பொதுச்செயலர் திரு. தென்னவன்கோ, ம.க.இ.க திரு. கோவலன் ஆகிய இருவரும் அருவருப்பான கலை இலக்கியங்களின் பண்பாட்டுச் சீரழிப்புப் பங்கினையும், அவை முடுக்கிவிடப் பட்டிருக்கும் நோக்கத்தினையும், அவற்றை ஒழிக்க வேண்டியதன் தேவையையும் வலியுறுத்திச் சிறப்புரையாற்றினர். ம. க. இ. க. திரு. தமிழ்மணி நன்றி நவிலவும், கொள்கை முழக்கப் பாடலுடன் ஊர்வலம் இனிதே கலைந்தது.

— செய்தி: நெடியோன்.

திருச்சியில் தமிழீழ மாணவர் பேரவை, வாயில் கருந்துணி கட்டி

அமைதி ஊர்வலம்!

தி.பி. 2016, கடகம் 11 ஆம் பக்கல் (26-7,85) வெள்ளிக்கிழமை, முற்பகல் 11 மணி அளவில், திருச்சிராப்பள்ளியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மாணவர் அமைப்பான தமிழீழ மாணவர் பேரவை (T.E.S.O.) யின் சார்பில் இலங்கை வெளிக்கடைச் சிறையாளிகள் படுகொலையின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் கடைப்பிடிக்கப் பட்டது.

இதன் நினைவாகத் திருச்சிராப்பள்ளி, சிந்தாமணி அண்ணா சிலையிலிருந்து அமைதி ஊர்வலம் ஒன்று புறப்பட்டுத் தலைவாயில் (Main Guard Gate), மேலரண்சாலை, வழியாகச் சென்று, மரக்கடை வழியாகத் திரும்பி, கடைத்தெருவைச் சுற்றி, நகர்மன்ற வாயிலில் முடிவடைந்தது. ஊர்வலத்தில் கலந்துக்கொண்ட பெண்கள், குழந்தைகள் உட்பட ஐந்நூற்றுவரும், வாயில் கருப்புத்துணி கட்டித் தங்கள் துயரத்தைத் தெரிவிக்கும் வாயிலாக நடந்து வந்தனர். உ.த.மு.க. திருச்சி மாவட்டச் செயலர் திரு. நாரா. மகிழ்நன் ஊர்வலத்தை ஒழுங்கு செய்தார். இலங்கைத் தமிழரும், தமிழீழப் போராளிகளும் ஏராளமானோர் இவ்வூர்வலத்தில் பங்கேற்றனர். ஊர்வலத்தின் இறுதியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. நகுலன், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச்செயலர் திரு. தென்னவன்கோ ஆகியோர் வெளிக் கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழப் போராளிகளை நினைவுகூர்ந்து சிறப்புரையாற்றினர்.

தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த திரு. வாசுதேவா, செல்வி. மல்லிகா ஆகிய இருவரும் நன்றி நவில, ஊர்வலம் தமிழீழ விடுதலையை எண்ணியவாறே துயரத்துடன் கலைந்தது.

—செய்தி: நெடியோன்.

நமீபியாவில் தலைவிரித்தாடும் அரசக் கொடுமை நிலைகள்!

தென் ஆப்பிரிக்க இனவெறிக் கொடுமையாட்சியர்கள், நமீபியாவை நேர்மைக்கும், சட்டத்திற்கும் மாறாகக் கையகப்படுத்தியதுடன், உலக நாடுகளின் கண்டனத்தையும் மீறி, நமீபியா சிக்கலுக்கு இடைக்காலத்தீர்வு எனும் பெயரில், தமது கொடுமை முறைச் செயல்களை நமீபியா மக்கள் மீதும், நமீபியா விடுதலைப்போராளிகள் மீதும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். நமீபியாவைத் தகுந்தமுறையில் ஆளுமை செய்யவும், எந்த முறை நடவடிக்கை எடுப்பதற்கும் முழு உரிமை உண்டு என, ஆளும் கொடுங்கோலர்கள் கூக்குரலிடுகின்றனர்.

நமீபியாவில் இடைக்கால ஆட்சியை அமைக்கப் போவதாகக் கூறிக்கொண்டு, ஊழல்களுக்குப் பெயர் போன அரசியல்காரர்களை ஆதரிக்கவும், நமீபியா விடுதலைப் போராளிகளின் (சுவாபோ) இயக்கத்தினரின் கடும் தாக்குதலுக்கு உள்ளாகி, நிலைகுலைந்து போயிருக்கும் இனவெறி அரசை வலுப்படுத்தவும், ஆளும் இனவெறிக் கொடியவர்கள் முனைந்து வருகிறார்கள். உலக ஒன்றியப் பேரவையில் 435 எண்ணுள்ள பாதுகாப்புக் குழுத் தீர்மானம் நடைமுறைப் படுத்தப்படுவதைச் சீர்குலைக்கவும் தென் ஆப்பிரிக்கா முனைகிறது. உலக ஒன்றியப் பேரவைத் தலையீடு இல்லாமல சிக்கலுக்குத் தீர்வு காணவும், தீர்வுகாணும் முயற்சியில் தென்மேற்கு ஆப்பிரிக்க மக்கள் இயக்கம் (சுவாபோ) முயற்சி எடுப்பதைத் தடுப்பதற்கும் ஆப்பிரிக்க அரசு இன வெறியர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

எனவே, நமீபியாவில் அரசு அடுக்குமுறைகளையும், கொடுமைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். வடக்கு நமீபியாவில் கப்ரிவி பகுதிகளைப்போலி உரிமையுள்ள பகுதியாக மாற்றவும், அங்கே ஒரு பெரிய படைத் துறைத் தளத்தை அமைக்கவும், அண்டை நாடுகளான அங்கோலா, சாம்பியா, பாட்சுவானா, சிம்பாவே போன்ற நாடுகளையும் கையகப் படுத்துவதற்காக அந்த படைத்துறைத் தளத்தைப் பயன்படுத்தவும் திட்டமிட்டுள்ளனர். இவற்றுக்குமேல் கருவி ஏந்திப் போராடும் சுவாபோ இயக்கப் போர் வீரர்கள் கடும் தாக்குதல் நடத்தித் தென் ஆப்பிரிக்க இனவெறி அரசின் திட்டங்களைத் தொடர்ந்து முறியடித்து வருகின்றனர்.

- வியனரசு.

பரத்தமை இலக்கியங்கள் ஒழிக!

நமீபியாவை வல்லாளுமை செய்கின்ற தென்னாப்பிரிக்க ஆளும் பிரிவினர் தென்னாப்பிரிக்க வாழ் இனத்தினரை ஒடுக்கும் வரலாறு :

தென்னாப்பிரிக்க விடுதலைப் போராட்டம்!

'தன்தீர்வு (சுயநிர்ணய) உரிமையை அல்லது பிரிந்து போகும் உரிமையை மறுப்பது என்பது, மேலோங்கி ஆட்சி புரியும் தேசிய இனத்தின் சிறப்பு உரிமைகளை நடைமுறையில் ஆதரிப்பதாகவே முடியும்.'

—இலெனின்

எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக உரிமை கேட்டுப் போரடிக்கொண்டிருக்கிற தென்னாப்பிரிக்கக் காப்பின மக்களின் புரட்சி, கடந்த சில மாதங்களாக நிலநடுக்கமென வெடித்துச் சிதறிக்கொண்டிருக்கிறது. உரிமை கேட்டு எழுந்த அவ்வினத்தின் அடிமைத்தனம் என்பதும் அவ் வடிமைத்தனங்களினின்று அவ்வினம் போராடும் நிலையும் தமிழ்த் தேசிய இன விடுதலை விரும்பிகள் படித்துத் தெளிய வேண்டியது.

'அபாதையிட்' (Apartbied) (நிறவெறிக் கொள்கை) என அழைக்கப்படும் தென்னாப்பிரிக்க ஒடுக்குமுறை, நிறத்தை அடிப்படையாகக் கொண்ட இன வேறுபாட்டைக் குறித்து நிற்கிறது. தொழில் துறை, கல்வித்துறை, ஆளுமைத்துறை, மற்றும் குமுக வாழ்வில் கருப்பு இன மக்களை வெள்ளையர்களிடமிருந்து பிரித்துத் தனிமைப் படுத்தியிருக்கின்றது ஆளுமைப் பிரிவு. தென்னாப்பிரிக்க நிலத்தின் தொன்மை வாழ் மக்களான **இரண்டு கோடிக்கும் அதிகமான கருப்பர்களை, நாற்பத்து ஏழு இலக்கமே எண்ணிக்கை அளவில் கொண்ட வெள்ளையாகள்** காக்கிப்பிழிந்து அடிமைப்படுத்துகின்றனர்.

வரலாற்றுச் சுருக்கம்

குடிபெயர்ந்த வல்லாளுமை(காலனித்துவ)ஊடுருவலுக்கு முன்னர் தென் ஆப்பிரிக்கா பல தேசிய இனங்களின் நட்புறவு அமைப்பில் ஒரு நடுவண் அரசு அமைப்பை ஏற்படுத்தி ஆளப்பெற்றுவந்தது. கி.பி. 1752-ஆம் ஆண்டு நன்னம்பிக்கைமுனை Cape of good Hope)யில் முதல் முதலில் ஆலந்துக்காரர்கள் (Holands தம் ஆளுமையை நிலைப்படுத்தினா. ஆனால் அதைத் தென்னாப்பிரிக்க மக்கள் கடுமையாக எதிர்த்துப் போர் புரிந்தனர். இதன் விளைவாக நாட்டின் வளமான பகுதிகள் ஆலந்துக்காரர்களிடம் கையடக்கப் பட்டுப்போயின. கி.பி.1815-ஆம் ஆண்டு நன்னம்பிக்கை முனை ஆங்கிலேயர் (British)களிடம் கையகப்பட்டது. இதை அடுத்து ஆங்கிலேயருக்கும், ஆலந்துக்காரர்க்கும் இடையில் ஏற்பட்ட சண்டை காலப் போக்கில் ஐரோப்பிய ஆளுமையை நிலைப்படுத்தும் நோக்கில் மறைந்தன. கி. பி. 1906-இல் ஆப்பிரிக்க மக்களின் கிளர்ச்சி முழுமையாக ஒடுக்கப்பெற்று கி.பி. 1910-ஆம் ஆண்டு அளவில் சட்டத்திற்குப் புறம்பான இனவெறி அரசைத் தென் ஆப்பிரிக்க மாநிலங்களைக்கொண்டு அமைத்தது வெள்ளையர் ஆட்சி.

தென்னாப்பிரிக்கா முழுமையும் தம் முற்றாளுமைக் குட்பட்ட நிலைக்குப்பின் பிரித்தானியர் பொருளியல் சுரண்டலைத் தொடங்கினர். தென்னாப்பிரிக்கக் கனி வளங்களான தங்கம், வைரம் போன்றவற்றைச் சுரங்கம்வெட்டி, கருப்பின மக்களைப் பணியில் அடிமைப்படுத்தி, ஈடுபடுத்தி அப் பொருள்களைத் தம் நாட்டிற்குக் கடத்தனர். உழவுத்தொழிலில் ஈடுபட்டிருந்த பெரும்பாலான தென்னாப்பிரிக்கர்கள் தம் நிலத்தை இழந்து உழவு வாழ்க்கையினின்று இவ் வடிமை வாழ்க்கை நடத்தினர்.

அரசியல் அடிப்படையிலும், பொருளியல் அடிப்படையிலும் மேலைய ஐரோப்பிய இனத்திற்கு அடிமைப்பட்ட கறுப்பர் இனம் பலவகையான கொடுமைச்சட்டங்களைத் தாங்கவேண்டியிருந்தது. அவ்வகைக் கொடுமைச் சட்டங்களே 'அபாதையிட்' எனப்படும் நிற ஒடுக்குதல் முறையை உருவாக்கியது.

இவ்வின ஒடுக்கல் முறை முழுமையாக அனைத்து உரிமைகளையும் பறித்தது. கறுப்பர்கள் தம் சொந்த வாழ்நிலங்களை விட்டு வறண்ட, பயனற்ற பகுதிகளுக்கு விரட்டி அடிக்கப்பட்டனர்.

மேலும் தங்கள் நாட்டிற்குள்ளாகவே அவர்கள் பல இடங்களுக்குச் செல்லத் தடை ஏற்படுத்தப் பெற்றிருந்தது. வெள்ளையர்கள் வாழும் பகுதிகளுக்கு அவர்கள் எப்பொழுதும் புக முடியாமல் இருந்த நிலையில் கொடுமைப் படுத்தப்பட்டனர்.

ஆப்பிரிக்க விடுதலை இயக்கத்தின் தோற்றம்

இவ் வகை அடிமை நிலைகளில் தீர்வு காண 1912-இல் ஆப்பிரிக்க தேசியப் பேராயம் உருக்கொண்டது. இதன்வழி பல கோரிக்கைகள் அரசிற்குத் தெரிவிக்கப்பெற்றது. ஆனால் அவற்றையெல்லாம் அரசு பொருட்படுத்தாமல் விட்டதோடு, கொடுமைகளை அதிகப்படுத்தியது. இதனால் இப் பேராயத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழக்க வேண்டி வந்தது.

இவ் வேளையில் 1944-ஆம் ஆண்டு இப் பேராயத்தின் உள்ளிருந்த இளைஞர்கள் கூடி **ஆப்பிரிக்க தேசிய இளைஞர் பேராயப் பேரவை** ஒன்றை ஏற்படுத்தி புதிய முறையில் இயக்கத்தை வழி நடத்தினர். அரசுக் கெதிராக மக்கள் போராட்டங்களை முடுக்கிவிடுதல், வேலை நிறுத்தங்கள் செய்தல் போன்ற வகையில் புரட்சி செய்தனர். இதில் மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். 1952-இல் தென்னாப்பிரிக்க இனவெறி அரசுக்கு எதிராக **'ஒத்துழையாமை இயக்கத்தை'**க் கட்டிச் செயல்படுத்தினர். இதனால் அரசு வெகுண்டு 8000 பேர்களைச் சிறைப்படுத்தி, விலங்குத்தனமாக அடக்கி ஒடுக்கினர்.

தேசிய விடுதலை முறையீடு

1955-சூன் திங்கள் 26-ஆம் பக்கல் அன்று நடைபெற்ற முறையான ஆண்டு மாநாட்டில் விடுதலை பெற்ற மக்களாட்சியை நோக்கித் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

* **தென்னாப்பிரிக்கா அதன் மக்களுக்கே சொந்தமாக்கப் படவேண்டும்.**
* **இனநிற வேறுபாடற்ற மக்களால் தேர்வு செய்யப்பட்ட மக்கள் நாயக அரசு நிறுவப் பட வேண்டும்.**
* **தேசியச் செல்வம் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.**

— இதுபோலும் தீர்மானங்கள் இனவெறி அரசு கலைக்கப்பட வேண்டும் என்றும், போராட்டங்கள் நடத்தப்பெற வேண்டும் என்றும் தெரிவித்தன.

இத் தீர்மானங்களுக்குப் பிறகு நாட்டில் கிளர்ச்சிக்கான நிலையில் மக்கள் அணியமாயினர். 1960-ஆம் ஆண்டு மார்ச்சு 21 சார்டவில் (Sharpeville) எனும் நகரத்தில் ஒத்துழையாமை இயக்கம் செயல்பட்டது 20 000 மக்கள் கலந்து கொண்ட அக் கிளர்ச்சியில் 67 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதன்பிறகு கிளர்ச்சி நாடு முழக்க பரவத்தொடங்கியது. இதனால் கடுமையான அடக்குமுறைக்குப் பின்னர் அரசு ஆ. தே. பே. இயக்கத்தைத் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவித்தது. எனவே அப் பேராயம் மறைமுக இயக்கமாக இயங்க வேண்டி வந்தது.

தேசியத்தின் ஈட்டி (Spear of the Nation)

இனவெறி அரசுக்கு எதிராக், கருவிவழி அடக்கு முறையை கருவிவழியே எதிர்கொள்ள முடியும் என்னும் மெய்ம்மத்தின் அடிப்படையில் 1961-இல் ஆ.தே.பே. 'போராட்டப்படை' ஒன்றை அமைத்தது. அதன் குறியீடாக ஈட்டி அமைக்கப்பெற்று **'தேசியத்தின் ஈட்டி'** என்ற பெயரில் அப் படை இயங்கியது. அதன் தளபதியாக **நெல்சன் மண்டேலா** பொறுப்பேற்றார்.

1961-திசம்பர் 14-அன்று 'தேசியத்தின் ஈட்டி' வெளியிட்ட அறிக்கையில் :

* அடிமைகளாக வாழ்வதா அல்லது விடுதலைக்காகப் போராடுவதா என்ற சூழல் ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் ஏற்படுவதுண்டு. அவ் விக்கட்டான சூழ்நிலை எமக்கு இக்கால் வந்துள்ளது. அச் சூழலில் ஒருபோதும் அடிமையாக வாழப் போவதில்லை என உறுதி கொண்டு எங்கள் ஆற்றல்களை இணைத்துப் போராடுவதைத் தவிர்த்துப் பிற பணி இல்லை.
* இதுநாள் வரை அமைதி முறையில் போராட்டங்களைக் கையில் எடுத்து வெல்ல முடியும் என்று தவறான எடையிட்டிருந்தது இப்பேராயம். இப்பொழுதுதான் புதுப்பாதை வழிதான் வெற்றி கொள்ள முடியும் எனக்கருதி, ஈட்டி இயக்கம் புரட்சிவழியைத் தழுவியுள்ளது.
* இனிமேல் அரசின் அடக்கு முறையை நாம் கருவிப் புரட்சி வழியே எதிர் கொள்ளுவோம். **ஒடுக்கப்படும் எம் மக்களின் போர்க்கருவியாக எமது இயக்கம் இயங்கும் எனத் தீர்மானம் செய்தனர்.**

புரட்சியின் பாதையில் ....

'தேசியத்தின் ஈட்டி' தம் பாதையைத் தொடக்கத்தில் 'கொரில்லா போர்' முறையிலேயே செய்தது. தென்னாப்பிரிக்காவின் ஆளும் வகுப்பின் பொருளியல் வலிமையைக் குறைப்பதற்காக 1961 திசம்பர் திங்கள் முதல் 1963-ம் வரை இருநூறுக்கும் மேற்பட்ட அழிவு வேலைகள் செய்யப்பட்டன. இதனால் கொதிப்புற்ற தென்னாப்பிரிக்க ஆளும் இனத்தினர் கடுமையான அடக்குமுறையை நடைமுறைப்படுத்தி 'ஈட்டி'யின் தளபதி திரு. நெல்சன் மாண்டேலா உட்பட பலரையும் சிறையிலடைத்த பின்னர், 'போராட்டப்படை'யின் செயலில் தேக்கம்ஏற்பட்டது. அவர்களுக்குக் கருவிகள் கிடைப்பது அரிதாக இருந்தது. தென்னாப்பிரிக்க எல்லை நாடுகளாய் இருந்த அங்கோலா, மொசாம்பிக் போர்த்துக்கீசியரிடம் அடிமைப்பட்டிருந்ததால், அந்நாடுகள் வழியும் உதவி இல்லாமல் போனது அவ் வியக்கத்திற்கு.

ஆனால் 1976-ஆம் ஆண்டுக்குப் பின்னர் போர்த்துக்கீசியர் பிடியினின்று எல்லை நாடுகள் விடுதலை பெற்றபின் அங்கோலா, மொசாம்பிக் நாடுகளில் தம் படைப்பயிற்சிகளை மேற்கொண்டதோடு உள்முக இயக்கத்தை வலுவாக அமைத்துக் கொண்டது, போராட்டப்படை, இச் சூழல்களில் சீனா, லிபியா நாடுகளிலிருந்தும் அவர்களுக்குக் கருவிகள் உதவிக்கு வழங்கப்பெற்றன.

இச் சூழலில் 1976 முதல் கொரில்லா தாக்குதல்கள் மிகுதியாகத் தொடர்ந்தன. அவ் வகையில் எண்ணெய்க் கிடங்குகள், மின்னாற்றல் நிலையங்கள், ஆகிய இடங்கள் அழிவு வேலைக்கு உட்பட்டன.

கொரில்லாப் போராட்டம் வலுப் பெற்றுவந்த பொழுதில் புற இயக்கம் - பொதுமக்கள் இயக்கமும் வலுவாகக் கட்டமைக்கப் பெற்றது. 1976- இல் மிகப்பெரிய மாணவ, மாணவியர் போராட்டம் நடத்தப்பெற்றது, அதில் 252 பள்ளிச் சிறுவர்கள் கொல்லப்பட்டதுடன் 2000-பேர்கள் காயப்படுத்தப் பட்டனர். இதனால் தென்னாப்பிரிக்கா உணர்வெழுச்சி கொண்டு கொதித்தது.

அன்று முதல் இன்றுவரை அமெரிக்க வல்லாளுமையின் துணை கொண்டியங்கும் பிரித்தானிய வல்லரசியம் அடக்கி ஆளுமைப்படுத்திக் கொண்டிருக்கிற இத்தென்னாப்பிரிக்க, நமீபிய நாட்டு மக்களின் உண்மை உணர்ச்சியில் எழுந்த புரட்சியின் வெற்றி, அம் மக்களின விடுதலை நெடுந்தொலைவில் இல்லை என்னும் நிலையை உண்டாகியுள்ளது.

கருவிவழி எந்த மக்களினத்தையும் அடக்கி ஒடுக்க முடியாது என்ற வரலாற்று உண்மையைத் தென்னாப்பிரிக்க ஆளுமை அரசு விரைவிலேயே உணர்ந்து கொள்ளும் என்பதில் ஐயத்திற்கிடமே இல்லை. — **'விடுதலைப்புலிகள்' இதழிலிருந்து**

மலரும் புதிய நாடு அருபா

நெதர்லாந்து நாட்டின் ஆட்சியில் உள்ள 195 சதுர அயிரமாத்திரி (கிலோமீட்டர்) பரப்பளவு உள்ள அருபா எனும் மாநிலம், மலரும் புத்தாண்டு சனவரித் திங்கள், முதல் நாளில் இருந்து புதிய தனி நாடாக மலரும் என நெதர்லாந்து அரசு அறிவித்துள்ளது. அருபாவிற்கு விடுதலை கொடுக்கும் சட்டம் நெதர்லாந்து சட்டமன்றத்தில் உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டது. அருபாவைத் தனி நாடாகவும் தோழமை நட்பு நாடாகவும் ஏற்றுக் கொள்ளவும் நெதர்லாந்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. புதிய நாட்டின் மக்கள் தொகை 70 ஆயிரம் தான். இதைக் கண்டபிறகாவது 40 இலக்கம் மக்கள் தொகையும், 25 ஆயிரம் சதுர அயிரமாத்திரி (கிலோமீட்டர்) (1500 சதுரக்கற்கா) பரப்பளவுமுள்ள தமிழீழம் தனி நாடாக மலர்ந்தால் தனித்து இயங்க முடியுமா எனக் கேட்பவர்கள் உண்மை உணர்வார்களாக !

— வியனரசு

அடக்கப்படுபவர் ஒருநாள் எழுச்சி கொள்வர்!

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம்!

12-5-1985 - இல் ஈரோட்டில் கூடிய கூட்டத்தின் நிகழ்ச்சிச் சுருக்கம்! (தொடர்ச்சி-5)

(பாவலரேறு உரையின் தொடர்ச்சி)

நாம் வெளிப்படையாக அமைத்திருக்கும் உ. த. மு. க. கொள்கைகளாக அறிவித்திருக்கும் ஏழு கொள்கைகளில் தமிழ் நாட்டுப் போராட்டக் கொள்கையை, நாம், ஒரு கொள்கையாக வைக்கவில்லை.

ஏனென்றால், நம் இயக்கத்தில் உள்ளவர்களில் பெரும்பாலோர் அரசுப் பணிகளில் உள்ளவர்களே. அவர்கள் வெளிப்படையாக முன்வந்து போராட முடியாது. தேவையானால், இறுதி நிலையில் அவர்களும் போராட்டத்தில் இறங்கத் தயங்கமாட்டார்கள்.

எனவேதான், போராட முன் வருபவர்களை வைத்துக்கொண்டு, மற்ற இயக்கங்களையும் சேர்த்துக் கொண்டு ஒரு கூட்டணியாக நாம் போரிடவேண்டும் என்று முடிவெடுத்தோம்.

போராட்டத்திற்கு முன், நாம் பொதுமக்கள் அணிகளைக் கட்டியாக வேண்டும். கூட்டணியின் சார்பில் உழவர் பேரணி, கூலி உழவர் பேரணி, தொழிலாளர் பேரணி, மகளிர் பேரணி, இளைஞர் பேரணி, மாணவர் பேரணி, கலைஞர் பேரணி என்னும் ஏழு பேரணிகளை நாம் கட்டமைத்தல் வேண்டும். அத்தனைப் பேரணிகளையும் அமைப்பது அத்துணை எளிதான செயலில்லை. மிகவும் கடினம். போதிய பொருளியல் வலிவு நம்மிடம் இல்லை. மேலும், உயிர்ப் போராட்ட முயற்சியாக இது இருப்பதனால், இதற்கு ஆதரவும், இதில் கலந்து கொள்ள வருபவர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே இருக்கும். ஆனாலும், நாம் போராடியாகத்தான் வேண்டும். உறுப்பினர்களையும், போதிய பொருளியல் ஏந்துகளையும் கொண்ட இயக்கங்களே இதில் நேரிடையாக முயற்சி செய்ய அஞ்சுகின்றன. நாம்தாம் இதில் ஏதேனும் ஒரு முடிவை எடுத்துப் போராடியாக வேண்டும். நாமும் போராடாமல் விட்டு விட்டால், பின்பு இக்கொள்கை காலப்போக்கில் வலிவற்றதாகவும், செயலாற்றுவதற்கு யாருமே முன் வராமலும் போய்விடலாம். எனவே, நாம்தாம் இப்போராட்டத்தை இன்றில்லையானாலும், நாளை முன் வைத்தாக வேண்டும்.

தொடக்கத்தில், இது கருத்துப் போராட்டமாகவும், பின்னரே கருவிப் போராட்டமாகவும் மாறும். நேரிடையாகப் போராட முன் வராதவர்கள், மறைமுகமாகவேனும் இதற்கு ஆதரவையும், வலிவையும் ஊட்டிக் கொண்டிருக்க வேண்டும். போராட முன் வருபவர்கள் தங்களின் பெயர்களைக் கொடுக்கவேண்டும். கொடுக்கப்படும் பெயர்களுள் தகுதியானவர்கள் பின்னர் தெரிந்தெடுக்கப்பட்டு, அறிவிக்கப்படுவார்கள். அதன்பின்னர், அவர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டால் போதுமானது.

வெறும் உணர்வு வயப்பட்டு எவரும் முடிவுக்கு வந்துவிட வேண்டாம். அவ்வாறு வரமாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

இடைவேளை உணவுக்குப் பின், இங்கு பேசப் பெற்ற கருத்துகளைப்பற்றி நன்கு ஆய்ந்து: தங்களின் கருத்துகளைத் தெரிவிக்க விரும்பும் அன்பர்கள் முறையாக வந்து தெரிவிக்கலாம்'' என்று பேசி முடித்தார்கள்.

இடைவேளை உணவுக்குப் பின்னர், சரியாக 3-30 மணியளவில் செயற்குழுக் கூட்டம் மீண்டும் பாவலரேறு அவர்கள் தலைமையில் கூடியது.

பல மாவட்டங்களிலும் இருந்து வந்த அன்பர்கள் வரிசையாக வந்து, நாம் எடுத்துச் செல்லப் போகும் கொள்கைபற்றிய தங்கள் ஒப்புதலைத் தெரிவித்தார்கள்.

திருவாளர்கள்: பாவலர். கொ. செ. சின்னப்பனார் (ஈரோடு), அ. தமிழன்பன் (கடையநல்லூர்), மா. செ. தமிழ்மணி (நெமலி), புலவர். குமர. தன்னௌியன் (வேலூர்), மணிமுத்து (பழனி), கரிகாலன் (முசிறி), கரிகாலன் (வீரமங்கலம்), தென்மொழி இளமாறன் (பவானி), அதியமான் (நெல்லை), மகிழ்நன (திருச்சி), தமிழப்பன் (திருப்பூர்), முத்துக்குமாரசாமி (புகவை), கணேசன், இளஞ்சேரல், முதுபாண்டியன் (மின் பாறை, பாவலர். கடலூர். மணிமாறன் (கரூர்', தென்மொழி துரையரசன (திருப்பூர்), ஆறுமுகம், முத்துக்குமரன் (பல்லடம்', புலவர். பொதிகைச் செல்வனார் (பவானி), தினகரன் (திண்டுக்கல்), பேரா. அரங்கச் செல்வனார் (கோபி), அரசமாணிக்கனார் (ஈரோடு), வள்ளிகேள்வன் (திருப்பூர்), புலவர். இரா. வடிவேலன் (பெருந்துறை), செய். அருண்மொழியன் (தங்கச்சி மடம்), மா. பொழிலன் (சென்னை), ஆகியோர் தங்கள் கருத்துகளை மிகவும் ஆணித்தரமாகவும், விளக்கமாகவும், எடுத்துக் கூறினார்கள்.

அனைவரின் கருத்துரைகளுக்கும் விடையளிக்கின்ற வகையில், பாவலரேறு அவர்கள் தம் இறுதியுரையை ஆற்றினார். அவ்வுரைச் சுருக்கம் வருமாறு:

'ஒரு செயலைச் செய்வதற்கு முன்னர், நாம் அது கடுமையானதாக இருப்பினும், அதைப்பற்றி எடுத்துச் சொல்கிற அளவுக்கு நாம் துணிவு பெற்றிருக்கின்றோம் என்பதையே இங்கு பேசிய அன்பர்களின் பேச்சு நமக்குத் தெரிவிக்கிறது. முதலில் நாம் உரிமையை உணர்ந்தாக வேண்டும்.

உரிமைக்காக நாம் போராடுகையில் அப்போராட்டம் எப்பொழுதும் படிநிலை வளர்ச்சி பெற்றுத் தீவிரமுறும். தொடக்கத்தில் அரசுப் பணியாளர்களெல்லாரும் அப் போராட்டத்தில் பங்கு பெறமற் போயினும், இறுதியில் அனைவரும் ஈடுபட்டே ஆகவேண்டும். எடுத்த எடுப்பிலேயே போராட்டம் நடந்துவிடும் என்றும் கருதவேண்டியதில்லை. காலப்போக்கிலேயே போராட்டம் தொடங்கும். அதுவும் ஒரு கால கட்டத்திலேயே வலுப்பெறும். தொடக்கத்தில் அதன் தொடர்பான அடிப்படைக் கருத்துகளைப் பரப்புவதிலேயே காலம் செலவழிக்க வேண்டியிருக்கும்.

நம் கருத்துகள் செய்தித் தாள்களில் வரும்; நம் போராட்டச் செய்திகள் வரும் என்றெல்லாம் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. மறைமுகமாகச் சொல்லிக் கொண்டிருந்த நிலை போய் வெளிப்படையாகச் சொல்லவேண்டிய நிலைக்கு நாம் வந்துவிட்டோம். இனி, நாம் தெருவுக்கு இறங்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

போராட்டத்தைத் தொடங்குகிற நாமே இதில் முழுப்பங்கும் பெற்றுவிட முடியாது. பொதுமக்களை ஈடுபடுத்தித்தான் போராட்டத்தை நாம் வென்றெடுக்க வேண்டும்.

கூட்டணியில் ஈடுபடும் போராளர்கள் இனிமேல் கண்காணிக்கப்படலாம். அவர்கள்மேல் எதிர் நடவடிக்கைகளும் எடுக்கப்படலாம். அதற்கெல்லாம் போராளிகள் அஞ்சிவிடக் கூடாது, எப்பொழுதுமே விடுதலைப் போராட்டம் என்பது பலவகையான எதிர்ப்புகளுக்கும், இடர்ப்பாடுகளுக்கும் இடையில்தான் நடைபெறுதல் வேண்டும். எளிமையான முயற்சியாக இது இருக்க முடியாது. கடுமையான விளைவுகளையே நாம் எதிர்கொண்டாக வேண்டும்.

இப் போராட்டங்களில் ஈடுபட்டால் ஏதாவது குந்தகம் விளையும், தீங்கு என்று கருதுபவர்கள் எவரும் இவற்றில் ஈடுபடாமலே விலகியிருக்கலாம். விடுதலைப் போராட்டங்கள் அரசியல் கட்சிகள் நடத்தும் போராட்டங்களைப் போன்றவை அல்ல. இவற்றுக்கெல்லாம் ஆள்களைத் திரட்டிக்கொண்டு இருக்க முடியாது. அவர்கள் தாமே வந்து அவற்றில் ஈடுபாடு-கொள்வதே தக்கது.

திராவிட நாடா? தமிழ் நாடா?

தந்தை பெரியார் விளக்கம்!

திராவிட நாடு எது? இதற்கு முன் 1956-க்கு முன் இருந்த சென்னை மாநிலத்தை (மாகாணத்தை) நான் திராவிட நாடு என்று சொன்னேன். அப்பொழுது மலையாளம், கன்னடம், ஆந்திரம் பிரிந்திருக்கவில்லை. வெள்ளையன் இந்த நாட்டை விட்டுப் போய்விட்ட பிறகு வடநாட்டானும். இந்தப் பார்ப்பானும் சேர்ந்துக்கொண்டு, இனிமேல் நமக்கு வீழ்ச்சி என்று கருதி, நான்கு பிரிவுகளாய் வெட்டி விட்டார்கள். இப்பொழுது நம்மோடு ஒட்டிக் கொண்டிருந்த கள்ளிக்கோட்டை, மங்களூர், மாவட்டங்களும், மலையாள, கன்னட நாடுகளோடு சேரப் போகின்றன, இப்பொழுது நம்முடன் மலையாள கன்னட நாடுகளின் தொடர்பில்லாமல் தனித்தமிழ் நாடாக ஆகிவிட்டோம். ஆகவே இதை இப்பொழுது ''தமிழ் நாடு'' என்று சொல்லலாம்! முன்பு அவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னோம். ஆனால், அவர்கள் பிரிந்து தனியாகப் போவதிலே கவனத்தைச் செலுத்தி பிரிந்துப் போய் விட்டார்கள்: நாம கட்டுப்பாடற்ற அடிமைகளாய் உள்ளோம். வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில் பார்ப்பனர்களின் கொடுமைகளைச் சொல்ல வழி இருந்தது. அவர்களும் நாம் சொல்வதைக் கேட்டுச் சிலவற்றைக் கவனித்து வந்தார்கள். இப்பொழுது நம்நாடு வடநாட்டிற்கு கட்டுப்பாடற்ற அடிமை நாடாகிவிட்டது.

நாங்கள் வெள்ளையரை அப்பொழுதே கேட்டோம். நாங்கள் உங்களைப் போர்க்காலத்தில் ஆதரித்தோம். பார்ப்பனர்களும், வடநாட்டுக்காரர்களும் உங்களை எதிர்த்தார்கள். எங்கள் இனம் வேறு; அவர்கள் கலை, பழக்க வழக்கங்கள் வேறு என்று சொன்னோம் அதற்கு வெள்ளைக்காரர்கள், ''நீங்கள் எல்லோரும் ஒன்றுதான் என நினைத்து இருந்தோம் இதெல்லாம் உங்கள் குடும்பச் சண்டை நாங்கள் விரைவாக இந்த நாட்டைவிட்டுப் போகிறோம்'' என்று கூறி, இசுலாமியர்களுக்கு மட்டும் சிறு அரச உரிமையைப் பிரித்துக் கொடுத்துவிட்டுப் போய்விட்டனர். இப்பொழுது நாம் வடநாட்டு ஆட்சியில் இருந்து பிரித்து தனி நாடு ஆகவேண்டுமென்று கூச்சல் போடுகிறோம். தமிழ்நாடு தனி நாடாக இருந்தால், இருக்குமா என்று கேட்கிறார்கள். இல்லாமல் காக்கை கழுகு தூக்கிக்கொண்டா போய்விடும்? பக்கத்தில் இருக்கும் இலங்கை, பர்மா போன்ற நாடுகள் இருக்கும்பொழுது, நாம் மட்டும் இருக்க முடியாதா? நமக்குப் போதுமான ஏந்துகள் இங்கேயே இருக்கின்றன: நமக்கு நாடு கிடைத்து, வெள்ளையருடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் இந்த வடநாட்டான் ஓடிவிடுவானே.

—'தந்தை பெரியார் சிந்தனைகள்' நூலிலிருந்து.

—வியனரசு.

(முன் பத்தி தொடர்ச்சி)

திருவள்ளுவர் குடிசெயல்வகை அதிகாரத்தில் பொதுத்தொண்டு முயற்சிகளைப் பற்றிச் சொல்லுவார் எந்த முயற்சியையும் துணிவாகத் தொடங்கிவிடவேண்டும். பின்பு, அது தானே அதற்குண்டான இயற்கை முறையில் வளர்ச்சியுற்று முடிவு எய்தும்-என்பார். ஆனால் முயற்சி மட்டும் உண்மையாக இருக்க வேண்டும்; ஊக்கமாகச் செய்யப்பெறல் வேண்டும்.

சூழாமல் தானே முடிவெய்தும்; தன் குடியைத் தாழ்த்து உஞற்று பவர்க்கு;

எனவே, நாம் குடியை உயர்த்துகின்ற முயற்சியைத் துணிவுடன் தொடங்குவோமாக-என்பதாகப் பேசி முடித்தார்.

இறுதியில், இந்நிகழ்ச்சிக்கு எல்லா வகையிலும் முழுக் காரணியராக இருந்த உயர்திரு. பாவேந்தர் இராமலிங்கம் பெரியார் மாவட்ட உ. த. மு. க. அமைப்பாளர் அவர்கள் நன்றிகூற நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

(முற்றும்)

அன்பர்கள் கவனிக்க ...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்குமேல், முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

-அமைச்சர்.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்: 63] பதிவு எண் TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு.
திருவல்லிக்கேணி
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்:
தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.